ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1706/10- 2011 මැයි 16 වැනි සඳුදා - 2011.05.16

*1706/10 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### ஊவா மாகாண மாகாண சபை

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011, மார்ச் மாதம் 01 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டி. சிறிசேன,
மாகாண சபை செயலாளர்,
ஊவா மாகாணம்.

இராஜ வீதி,
ஊவா மாகாண சபை அலுவலகம்.
பதுளை.
2011, மே 02.

### ஊவா மாகாண மாகாண சபை

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாண சபை கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்

ஊவா மாகாணத்தின் கிராம அபிவிருத்தி சங்கங்கள் கிராம அபிவிருத்தி பிரதேச அதிகார சபைகள் கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபைகள் மற்றும் மாகாண அதிகார ஆகியவற்றை தாபித்தல் பதிவு செய்தல், மற்றும் அவற்றை வழி நடாத்திச் செல்லல், அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளல், அத்துடன் தொடர்புடைய இடைநேர்விளையக் கூடிய விடயங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமான 2001 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் கிராம அபிவிருத்தி நியதிச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கான நியதிச் சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

1. இந்நியதிச் சட்டத்தை ஊவா மாகாண சபையின் 2011 ஆம் இலக்கமுடைய கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதோடு - ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதி கிடைத்த நாள் முதல் அல்லது விதிக்கப்படும் பின்னொரு நாள்முதல் நடைமுறைக்கு வரும். சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

நோக்கமும் கடமைகளும்.

2. கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் கிராம அபிவிருத்தி நிலையங்களை ஏற்பாடு செய்தல், பதிவு செய்தல், அவற்றை வழி நடாத்திச் செல்லல் என்பன ஊடாக கிராமிய மக்களுடைய சமூக பொருளாதார மற்றும் ஆன்மீக அபிவிருத்தியை வலுப்படுத்தல்.

2.1 கிராமிய மக்கள் - கிராமிய - பிரதேச அபிவிருத்தி பணிகளில் ஈடுபாடுகளை நிறைவேற்றல்.

2.2 கிராமிய மக்களுடைய அபிவிருத்தி பணிகளை திட்டமிடுவதற்கும் தீர்மானிப்பதற்கும் தேவையான பணிகளுக்காக அவர்களுடைய பங்களிப்பை பெற்றுக் கொள்ளல்.

2.3 கிராமிய தலைமைத்துவத்தை பொறுப்பேற்கும் சனசமூக சேவைகளில் முன்னோடிகளாக தெரிவு செய்யக்கூடிய வகையில் கிராமிய மக்களை முன்னேற்றுதல் செய்தல், அறிவுறுத்தல், வலுப்படுத்தல்.

2.4 கிராமிய பெண்களுடைய இயற்கை திறமைகளை மகளிர் அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக வெளிக்கொணருவது மூலம் அவரவருடைய சமூக மற்றும் வாழ்க்கை தரங்களை ஒளிமயமாக்கி அதனூடாக மகளிர் அபிவிருத்தியை நோக்கிச் செல்லல்.

2.5 வினைத்திறன் மிக்க வகையில் கிராமிய இளைஞர்களை பிரதேச அபிவிருத்தி பணிகளில் பங்குதாரர்களாக்கல்.

2.6 புதிய அபிவிருத்தி ஈடுபாடுகளையும், தந்திரோபாயங்களையும் அறிமுகப்படுத்தல், தாபித்தல், கிராமிய இளைஞர்களை புதிய வழிகளில் அழைத்துச் செல்லல்.

2.7 மாகாண இளைஞர் யுவதிகளுடைய திறமைகளை வெளிக்கொணருவதற்கு பொருத்தமான செயற்திட்டங்களை வழிநடாத்தல்.

அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் அதிகார சபை யாப்பு.

3. இந்நியதிச் சட்டத்திற்கிணங்க தாபிக்கப்படுகின்ற கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் ஏனைய அதிகார சபைகள் சார்பாக மாகாண அமைச்சினால் வழங்கப்படும் மாதிரி யாப்புகளை தகுந்த அமைப்புகளில் பொது கூட்டமொன்றில் அங்கீகரித்துக் கொள்ளல்.

கிராம அபிவிருத்தி சபைகளும் ஏனைய அதிகார பிரதேசமும்.

4. கிராம அபிவிருத்தி சங்கமொன்றின் அதிகார பிரதேசமானது, கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு ஒன்றை மீறிச் செல்லல் தகாது. ஒரே கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவிற்குள் பொருளாதார, சமூக மற்றும் புவியியல் ரீதியிலான அறிமுகங்கள் உள்ள கிராம மற்றும் தோட்டப்புற குடியிருப்புகளை கொண்டதொரு பிரிவிற்கென வெவ்வேறாக கிராம அபிவிருத்தி சங்கங்களை தாபிக்க முடியும். ஏதேனும் விசேட செயற்றிட்டங்கள் தொடர்பாக ஒரு கிராம சேவைகள் பிரிவை அல்லது அதைவிட அதிக எண்ணிக்கையை கொண்ட கிராம அபிவிருத்தி சங்க அதிகார பிரதேசமாக இனங்காண முடியும்.

4.1 ஒரு பிரதேச செயலாளர் பிரிவிற்காக கட்டாயம் பிரதேச வாரியான கிராம அபிவிருத்தி அதிகார சபைகளை தாபித்தல் வேண்டும்.

4.2 சம்பந்தப்பட்ட நிர்வாக மாவட்டமே அம் மாவட்டத்தின் அதிகார பிரதேசமாகும்.

4.3 மாகாண அதிகார சபையை தாபித்தல் வேண்டும். பிரதேச அதிகார சபைகள், மாவட்ட அதிகார சபைகள் ஊடாக சுய தொழில் வாய்ப்புகளை ஆரம்பிப்பதற்கு உதவி செய்தல், கிராம அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், நிதி சேகரிப்பு மற்றும் அவற்றை தரமான முறையில் அவை தொடர்பில் கடமையாற்றுவது என்பன இதில் கடமையாகும்.

4.4 சம்பந்தப்பட்ட நிர்வாக மாவட்டங்களில் ஒன்றிணைப்பு மாகாண அதிகார சபையொன்றில் அதிகார பிரதேசமாகும்.

4.5 சம்பந்தப்பட்ட மாகாண அதிகார சபை நியதிச் சட்டம்.

**கிராம அபிவிருத்தி மாகாண அதிகார சபை யாப்பு**

1. பெயர் — இவ் அதிகார சபையை ஊவா மாகாணத்தின் கிராம அபிவிருத்தி அதிகார சபை என அறிமுகப்படுத்தப்படும்.

2. அலுவலகம் — கிராம அபிவித்தி அமைச்சு, ஊவா மாகாண சபை, பதுளை

3. அதிகார பிரதேசம் — ஊவா மாகாணத்திற்கு சொந்தமான பதுளை மற்றும் மொணராகலை மாவட்டங்கள்

4. குறிக்கோள் — பொதுவான அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் குறிக்கோளின் கீழ் ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மூலம் மக்களுடைய திறமை, ஆற்றல் மற்றும் சிரமத்தை அடிப்படையாகக் கொண்டு புதிய தொழில்நுட்ப அறிவையும், உட்கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுக்கொடுத்து இளம் சந்ததியினரின் திறமைகளை வளர்த்து, வருமான உற்பத்தி வழிகளில் அவர்களை வழியமர்த்தி அவர்களுடைய பொருளாதார சமூக, கலாசார துறைகளின் அபிவிருத்தியின் பங்களிப்பிற்காக - மாவட்ட அதிகார சபைகள் மற்றும் பிரதேச அதிகார சபைகள் ஊடாக ஏற்பாடு செய்தல் மற்றும் மாகாண நிதியத்தை ஆரம்பித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியிலாக நிதி சேகரிப்பதன் மூலம் பிரதேச அபிவிருத்தியில் நேரடியாக பங்களிப்பு செய்தல்.

5. **நோக்கங்கள்**

5.1 மாவட்ட அதிகார சபைகளை தாபித்தல் மற்றும் அவற்றை வலுவூட்டுவதற்கு ஏற்பாடு செய்தல்.

5.2 பிரதேச அதிகார சபைகளை தாபித்தல் மற்றும் அவற்றை வலுவூட்டுவதற்கு ஏற்பாடு செய்தல்.

5.3 ஊவா மாகாணத்தில் தாபிக்கப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள், மகளிர் அமைப்புகளில் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான வழி வகைகளை தயாரித்தல் அவற்றை நடைமுறைப்படுத்தல்.

5.4 கிராமிய அபிவிருத்தியோடு தொடர்பு கொள்ளும் அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றோடு இணைந்து அந்நிறுவனங்களுக்கு சொந்தமான மாவட்ட அதிகார சபைகள், பிரதேச அதிகார சபைகள் என்பவற்றை இணைத்தல் ;

5.5 உள்நாட்டு/சர்வதேச நிறுவனங்களோடு அனுபவங்களை பரிமாறிக் கொண்டு கிராம அபிவிருத்தியின் முதல்தர கடமைகளை நிறைவேற்றுவதற்கென மாவட்ட அதிகார சபைகள்/பிரதேச அதிகார சபைகளை வலுவூட்டல்;

5.6 சனசமூக அபிவிருத்தியின் பிரவேசித்தலுக்கு பதிலாக இலக்குவைக்கப்பட்ட குழுக்கோடு கிராமிய வறுமையை குறைப்பதற்காகவும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திக்கு தேவையான பங்குபற்றல் ரீதியிலான பிரவேசித்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான ஆராட்சிகள் மற்றும் பயிற்றுவிப்பு கடமைகளை திட்டமிடல் அவற்றுக்கான வழிகாட்டல் ;

5.7 எவ்வித பேதங்களுமின்றி கிராமிய அபிவிருத்தியில் பங்களிப்பு செய்கின்ற சட்டம், சமாதானம் என்பவற்றை கணிப்பிடும் ஒற்றுமையான சமூக முறையொன்றை ஊவா மாகாணத்தில் உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்தல் ;

5.8 மாகாண நிதியத்திற்கான நிதி சேகரித்தல் மற்றும் கிராம அபிவிருத்தி பணிகளுக்காக முறையான சட்ட திட்ட படிமுறைகளுக்கிணங்க பிரதேச அதிகார சபைகளுக்கு பெற்று கொடுத்தல்.

6. **அங்கத்துவம்**

6.1 மொனராகலை, பதுளை ஆகிய மாவட்ட அதிகார சபைகளில் கௌரவ தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய 06 உத்தியோகத்தர்கள்;

6.2 விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்படும் ஆறு அங்கத்தவர்களாவர். அதற்கென ஒரு மாவட்டத்தில் இருவர் தெரிவுசெய்யப்படுவார்;

6.3 இம் மாகாண அதிகார சபைகளுக்காக அரச தரப்பில் கீழ் இடம்பெறும் உத்தியோகத்தர்களும் அதிகார சபை ஆலோசகர்களாக தெரிவு செய்யப்படுவர்.

1. அமைச்சின் விடயம் பொறுப்பான செயலாளர்;
2. உதவி பணிப்பாளர் (கிராம அபிவிருத்தி) ;
3. மாவட்ட உத்தியோகத்தர்கள் 02 (கிராம அபிவிருத்தி).

7. **அங்கத்துவம் பெறல்**

7.1 மாவட்ட அதிகார சபைகளை பதிவு செய்யப்பட்ட பின், மாவட்ட உத்தியோகத்தர்கள் இருவருடைய சிபாரிசுகளோடு கிராம அபிவிருத்தி பணிப்பாளரால் அனுமதிக்கப்படும் கடிதத்தை முன் வைத்தல்.

7.2 விடயம் பொறுப்பான கௌரவ அமைச்சர் அவர்களினால் எழுத்து மூலமான பெயரிடுதல் மூலம்.

8. **அங்கத்துவத்தை இடைநிறுத்தல்**

8.1 மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகார சபையின் அங்கத்துவத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்படுதல்;

8.2 உரிய கால எல்லைக்குள் மாவட்ட அதிகார சபையில் நிலவுகின்ற அதிகார சபைகளை காலத்திற்கு உகந்தவாறு புதுப்பித்தல்;

8.3 கௌரவ விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் அங்கத்தவர்களுடைய தெரிவை இரத்துச் செய்தல்;

8.4 ஊவா மாகாணத்தில் நிரந்தர பதிவு இல்லாமை ;

8.5 உயிரிழப்பு ;

8.6 மாகாண அதிகார சபையின் குறிக்கோள்களுக்கும், நோக்கங்களுக்கும் முறனாக கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்படுதல்;

8.7 நீதிமன்ற குற்றவாளியாக தீர்மானித்த பின்;

8.8 02 வருட உத்தியோகபூர்வ காலம் நிறைவு பெறும் தருணத்தில்.

9. **பதவிக்காலம்**

மாகாண அதிகார சபையின் உத்தியோகபூர்வ காலம் 02 ஆண்டுகளாகும். 02 ஆண்டுகள் கடந்த பின் 03 மாதங்களுக்குள் மாகாண அதிகார சபையை தாபித்தல் வேண்டும்.

ஆனால் தாபிக்கப்பட்ட மாகாண சபையின் உத்தியோகபூர்வ காலம் நிறைவு பெறுவதற்கு முன்பு செயழிலந்திருப்பின், அல்லது, அதிகாரசபையின் பொது குறிக்கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு தவறிய மாவட்ட அதிகார சபைகள் இரண்டிலும் 26 பிரதேச அதிகார சபைகளினதும் கோரிக்கைகளுக்கிணங்க மாகாண அதிகார சபையை இரத்து செய்து மீள் தாபித்தல் பற்றி அமைச்சின் பணியாளருடைய சிபாரிசு மீது செயலாளரால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

10. **சபை கூட்டங்கள்**

10.1.1 வருடாந்த கூட்டம்

மாகாண அதிகார சபையை தாபித்து அல்லது ஆரம்ப கூட்டம் முதல்02 ஆண்டுகள் நிறைவு பெற்ற பின் 03 மாதங்களுக்கிடையில் மாகாண அதிகார சபையின் மாதாந்த கூட்டத்தை நடாத்த வேண்டும்;

10.1.2 இதற்காக நடைமுறையில் உள்ள உத்தியோகபூர்வ காலம் நிறைவு பெறாத 02 மாவட்ட அதிகார சபைகளுக்காக 16 நாட்களுக்கு முன் எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்;

10.1.3 14 நாட்களுக்கு முன் எழுத்து மூலமாக விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களிடம் அறிவித்தல் வேண்டும்;

10.1.4 மாவட்ட அதிகார சபைகள் செயழிழந்துள்ள சந்தர்ப்பங்களில் காலத்திற்கேற்றவாறு மாற்றும்வரை அமைச்சின் செயலாளருடைய விரப்பத்தின் பிரகாரம் மாகாண அதிகார சபையின் உத்தியோகபூர்வ காலத்தை 06 மாதத்திற்கு நீடிக்க வேண்டும்.

10.2.1 பொது கூட்டங்களை நடாத்துதல்

குறைந்த பட்சம் 03 மாதங்களுக்கு ஒருமுறை மாகாண அதிகார சபை கூட்டமொன்றை நடாத்த வேண்டும். இக்கூட்டத்திற்கான அங்கத்தவர்களை அறிவுறுத்தும் பணிகள் பற்றி 07 நாட்களுக்கு முன் எழுத்து மூலமாக மேற்கொள்ளல் வேண்டும்;

10.2.2 விசேட பொது சபை கூட்டங்களை நடாத்துதல்

விசேட பொது சபை கூட்டங்களை நடாத்துதல் அமைச்சின் செயலாளர் அவர்களுடைய அறிவுறுத்தல் அல்லது அதிகார சபை தலைவர் அவர்களுடைய கோரிக்கை மீது அல்லது அங்கத்தவர்களுடைய 2/3 கோரிக்கைக்கிணங்க 07 நாட்களுக்குள் விசேட பொது சபை கூட்டமொன்றை நடாத்த வேண்டும்;

10.2.3 நிர்வாக குழு கூட்டங்கள்

மாதம் ஒருமுறை நிர்வாக குழுகூட்டங்களை நடாத்த வேண்டும். நடாத்தப்படும் நிர்வாக குழு கூட்டங்களை பற்றி 05 நாட்களுக்கு முன் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களுக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்;

10.2.4 விசேட நிர்வாக குழு கூட்டங்கள்

அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் அல்லது அமைச்சின் செயலாளர் அவர்களுடைய கோரிக்கை மீது அல்லது தலைவர் அவர்களுடைய அறிவித்தல் மீது இரு நாட்களுக்கிடையில் நிர்வாக குழு கூட்டங்களை நடாத்த வேண்டும் ;

10.2.5 மேல் குறிப்பிடப்பட்டள்ள அனைத்து கூட்டங்களையும் நடாத்தும் தருணத்தில் அமைச்சின் செயலாளர் அவர்களை அறிவுறுத்த வேண்டியதோடு, அக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கென அமைச்சின் செயலாளர், கிராம அபிவிருத்தி பணிப்பாளர், கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும்.

11. **கூட்ட அங்கீகாரத்திற்கான உறுப்பினர்கள்**

பொது சபை கூட்டங்களை அல்லது நிர்வாக குழு கூட்டங்களை நடாத்துவதற்கு மொத்த அங்கத்துவத்தில் 1/3 அங்கத்தவர்களும் வருடாந்த சபை கூட்டமொன்றுக்காக 2/3 அங்கத்துவ வருகையும் தேவைபடும்.

மாகாண அதிகார சபையின் அல்லது ஆலோசனை சபையில் உறுப்பினராக இருக்க தகுதியற்றமை.

12. **பிரேரணைகள்**

பொது சபையொன்றுக்கு முன்வைக்கப்படும் பிரேரணைகளை பொது சபை கூட்டம் நடைபெற 02 வாரங்களுக்கு முன் செயலாளரிடம் எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.

13. **உத்தியோகத்தர்கள்**

அங்குரார்பண பொது சபை கூட்டத்தில் அல்லது வருடாந்த கூட்டத்தில் 12 நபர்களை கொண்ட குழுவிற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை வாக்கெடுப்பு மூலம் அல்லது சபை சம்மதத்தின் ஊடாக தெரவு செய்தல் வேண்டும் :-

| | | | |
|---|---|---|---|
| I | தலைவர் | - | 01 |
| II | செயலாளர் | - | 01 |
| III | பொருளாளர் | - | 01 |

| | | | |
|---|---|---|---|
| IV | உப தலைவர் | - | 01 |
| V | உப செயலாளர் | - | 01 |
| VI | கணக்காய்வாளர் | - | 01 |

ஏனைய 06 அங்கத்தவர்களும் நிர்வாக குழு அங்கத்தவர்களாவர்.

13.1.1 காப்பாளர்கள் குழு

மாகாண அதிகார சபை காப்பாளர் குழுவாக சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்திக் கொண்ட தலைவர்/செயலாளர்/பொருளாளர் ஆகிய மூவரும் சொந்த பெயர்களிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்த கூடிய வகையில் மாகாண பணிப்பாளர் அமைச்சின் செயலாளர் ஆகிய ஐவரும் கடமையாற்றுவார்கள்.

13.1.2 அரங்காவலர்

அதிகார சபை விருப்பத்தின் பிரகாரம் கிராம அபிவிருத்தி பணிகளில் ஈடுபடுகின்ற ஒருவர் போதகராக தெரிவு செய்யப்படுவர்.

13.1.3 ஆலோசகர்

கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், பணிப்பாளர்/மாவட்ட உத்தியோகத்தர்கள் இருவர் இவ் அதிகார சபை ஆலோசகராக கடமையாற்றுவார்கள். மாகாண அதிகார சபையின் குறிக்கோள்களுக்கு பாதகமற்ற வகையில் குழுவின் முன்னேற்றத்திற்கு ஏற்ற நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை வழங்குதல், சங்கத்திற்கு சொந்தமான நூல்களை பரிசோதித்தல் கூட்டங்களில் பங்குபற்றும் என்பவற்றுக்கான அதிகாரம் இவ் உத்தியோகத்தரகளுக்கு உண்டு.

13.1.4 உத்தியோகத்தரகளுடைய பொறுப்புகள்

(1) தலைவர் - அதிகார சபைக்கு தலைமை வகித்தல், மற்றும் அதிகார சபையின் கடமைகளை வழி நடாத்துதல் - ஒற்றுமையை பாதுகாத்து கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்களிப்பு செய்தல் என்பன தலைவருடைய பொறுப்புகளாகும்.

(2) செயலாளர் -செயலாளரினால் கீழ் குறிப்பிடப்படும் நூல்களையும் பட்டியல்களையும் நடாத்தி செல்ல வேண்டியதோடு கீழ் குறிப்பிடப்படும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

2.1 பொது சபை கூட்டங்கள், நிர்வாக குழு கூட்டங்கள், ஆண்டு இறுதி பொதுக் கூட்டங்கள், விசேட நிர்வாக குழு கூட்டங்கள் என்பவற்றின் அறிக்கைகளை தரமான முறையிலும் ஒழுங்கான முறையிலும் வழி நடாத்துதல்;

2.2 சங்க கூட்டங்களை உரிய வகையில் நடாத்துதல்;

2.3 சபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்தல்;

2.4 உத்தியோகபூர்வ முத்திரை உட்பட கிடைக்கின்ற அனுப்பப்படும் கடிதங்களை பற்றிய கடமைகள் ;

2.5 மாகாணத்திற்கு சொந்தாமன கிராம அபிவிருத்தி துறைக்கு சொந்தமான வினாக்களையும் தகவல்களையும் ஒதுக்கி வைத்தல்.

(3) பொருளாளர்

சங்கத்திற்கு சொந்தமான நிதி சொத்துக்கள் பற்றிய பொறுப்புகள் அனைத்தும் பொருளாளருக்கு சொந்தமானதாகும். கூட்டங்களில் அல்லது பொது சபை கூட்டங்களில் சங்கத்தின் வரவு செலவு பற்றிய பட்டியலொன்றை கணக்காய்வாளருடைய சிபாரிசு மீது சபைக்கு முன்வைத்தல் மற்றும் அமைச்சின் செயலாளர்/உதவிப் பணிப்பாளர்/மாவட்ட உத்தியோகத்தர்களிடம் முன்வைத்தல்.

(4) உப தலைவர்

தலைவர் அவர்களுக்கு உதவுதல் தலைவர் இல்லாத தருணத்தில் அவருடைய பதவியில் கடமையாற்றல்.

(5) செயலாளர் அவர்களுக்கு உதவுதல்
அவர் இல்லாத தருணத்தில் அவர் சார்பாக கடமையாற்றல்.

(6) கணக்காய்வாளர்
பொருளாளரால், தயாரிக்கப்படும் வரவு செலவு அறிக்கைகளை பரிசோதித்தல், சரிசெய்தல், அதிகார சபையின் சொத்துக்கள் பற்றி பரிசோதித்தல் அறிக்கைகளை உறுதி செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(7) நிர்வாக குழு அங்கத்தவர்கள்
மாகாண அதிகார சபையின் முன்னேற்றத்திற்கேற்ப அதிகார சபையால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது ஒத்துழைப்பு வழங்குதல் என்பன நிர்வாக குழுக்களின் பொறுப்பு களாகும்.

14. **நிதியம்**

கீழ்க்குறிப்பிடப்படும் வகையில் சங்கத்திற்கு தேவையான நிதியை பெற்று கொடுக்க முடியும்:-

(1) கௌரவ உறுப்பினர்களுடைய மற்றும் அமைச்சர்களுடைய ஒதுக்கீடுகளுக்கிணங்க அபிவிருத்தி பணிகளுக்கு பெற்றுக் கொள்ளும் நிதி;

(2) சங்கத்திற்கு சொந்தமான நிதியிலிருந்து செயற்றிட்டங்களுக்காக விடுவிப்பதிலிருந்து பெறப்படும் வட்டி பணம்;

(3) அதிகார சபை விருப்பத்தின் பிரகாரம் சட்ட கட்டளைகளுக்கிணங்க பொருத்தமான நடவடிக்கைகளை பின்பற்றி சேகரிக்கும் நிதி;

(4) அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தியாகிகளிடமிருந்து கிடைக்க பெறும் நிதி;

(5) ஊவா மாகாணத்திற்குள் செயழிலந்துள்ள கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு சொந்தமான நிதியை மாகாண நிதியத்திற்காக பொறுப்பளிக்க முடியும்.

15. **நிதி நிர்வாகம்**

அதிகார சபைக்கு சொந்தமான நிதியிலிருந்து 1000.00 (ஆயிரம்) ரூபாவை நிதியை பொறுப்பாளரின் கையிருப்பாக வைத்துக் கொள்ள முடியும். மிகுதி பணத்தை சங்கத்தின் பெயரால் அரச வங்கியொன்றில் வைப்பீடு செய்தல் வேண்டும். நிதி நிர்வாக பணிகளுக்கென கௌரவ தலைவர்/செயலாளர்/பொருளாளர் ஆகிய உத்தியோகத்தர்களுடையதும் கிராம அபிவிருத்தி உதவி பணிப்பாளர் மற்றும் விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்கள் கையொப்பமிடல் வேண்டும். நிதியை மீளபெறும் தருணத்தில், பொருளாளர் உட்பட தலைவர் அல்லது செயலாளருடைய இரு கையொப்பங்களையும், உதவி பணிப்பாளர் (கிராம அபிவிருத்தி) அல்லது விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளருடைய கையொப்பத்தையும் ஏற்றுக் கொள்வதற்கான அதிகாரத்தை வழங்குதல் வேண்டும்.

16. **யாப்பு திருத்தங்கள்**

காலத்திற்கு ஏற்றவாறு யாப்பு ரீதியிலாக நடாத்தப்படும் பொதுசபை கூட்டங்களில் 2/3 அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடைய விருப்பத்தோடு யாப்பு திருத்தங்களை அல்லது புதிய யாப்புகளை தயாரித்து விதிக்க முடியும். அதே போன்று கட்டாயமாக்கப்படும். யாப்புகளை அல்லது திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விடயம் பொறுப்பான அமைச்சின் செயலாளர் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

(5) கிராம அபிவிருத்தி சங்கம்

கிராம அபிவிருத்தி சங்கங்களின் கடமைகள்.

5.1 கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள் மற்றும் மனித வளங்களை தரமான மீளாய்வின் கீழ் இனங்காணல்;

5.2 கிராமிய வளங்களை உபயோகித்து மேற்கொள்ளப்படும் உற்பத்தி பணிகளில் -

(அ) ஏற்படும் சிக்கல்கள்

(ஆ) உற்பத்தி பணிகள் நிறைவு பெற்ற பொருட்கள் விற்பனையில் ஏற்படும் சிக்கல்களை தீர்த்து வைப்பது குறித்து முதலீடு ரீதியிலான அறிவுறுத்தல் பணிகளை மேம்படுத்தல்.

5.3 நடைமுறையில் உள்ள கிராமிய வருமான வழிகளை வினைதிறன் மிக்கதாய் மாற்றுவதற்கும் புதிய தொழில்நுட்பங்களை இனங்காண்பதற்கு மக்களை அறிவுறுத்தல்;

5.4 வழமையான உற்பத்தி செயற்பாடுகளை வினைதிறன் மிக்கதாக்குவதற்கு இனங்காணப்பட்டுள்ள புதிய தொழில்நுட்ப மற்றும் அணுகு முறைகள் கிராமிய மக்களை சென்றடைவதற்கான செயற்பாடுகளை அர்த்தமானதாக மாற்றுதல்;

5.5 திட்டமிடல் மற்றும் திட்டமிடல் பணிகளின் மூலதத்துவங்களை கிராமிய மக்களுடைய அறிவாக மாற்றல்;

5.6 மேல் குறிப்பிடப்படும் கடமைகளை நடைமுறைப்படுத்த தேவையான நிதியை சேகரித்தல்.

பிரதேச அதிகார சபைகளின் கடமைகள்

6.1 கிராம அபிவிருத்தி சங்கங்களை சரியான முறையில் வழி நடாத்த தேவையான ஆலோசனை பணிகளை வழங்குதல் ;

6.2 கிராம அபிவிருத்தி சங்க கடமைகளை உறுதி செய்வதற்கு தேவையான நிதியை கட்டியெழுப்புவது தொடர்பில் ஆலோசனை வழங்குதல்;

6.3 பிரதேச திட்டங்களை திட்டமிடுகையில், கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கான பிரேரணைகளை முன் வைப்பதற்கும் அவற்றில் பங்கு பற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குதல் ;

கிராம அபிவிருத்தி மாவட்ட அதிகார சபைகளின் கடமைகள்.

7.1 கிராம அபிவிருத்தி சங்கங்களினதும், பிரதேச அதிகார சபைகளினதும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குதல் ;

7.2 அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் இடைவிடாத ஒத்துழைப்பை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பெற்று கொள்ளக்கூடிய வகையில் நலமான இடைதொடர்புகளையும் புரிந்துணர்வுகளையும் மேம்படுத்தல் ;

7.3 மாவட்ட அபிவிருத்தியின் போது கிராம அபிவிருத்தி சங்கங்களின் அனுபவங்கள் பரிமாறிக் கொள்கின்ற சிறப்பு மிக்க வழிவகைகளை இனங்காணல்;

7.4 பங்குபற்றலுடனான அபிவிருத்தி பிரவேசிப்பில் தரமான பயன்களை திட்டமிடல் மற்றும் வழிகாட்டல் மூலமாக மக்கள் மத்தியில் நம்பிக்கையை மேம்படுத்தல்.

கிராம அபிவிருத்தி சங்க நிதியம்.

8. ஊவா மாகாண அதிகார சபைகளில் கடமைகள்.

8.1 தனது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் ஒவ்வொரு கிராம அபிவிருத்தி சங்கத்தினாலும் நிதியமொன்றை ஆரம்பித்து வழி நடாத்திச் செல்ல வேண்டும்;

8.2 பிரதேச அதிகார சபைகளில் அடிப்படை தேவைகளுக்காக, அவ் அமைப்பின் அங்கத்துவ கிராம அபிவிருத்தி சங்கங்கள் தத்தமது நிதியத்தினால், உறுதியான நிதியை வழங்குவது மூலம், பிரதேச அதிகார சபைகளுக்குள், தனது சங்கத்தின் அங்கத்துவத்தை உறுதி செய்தல் வேண்டும்.

மாகாண திணைக்களங் களை ஏற்பாடு செய்தல் மற்றும் உத்தியோத்தர்கள்.

9. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பு திருத்தத்தின் 09 ஆவது உப அட்டவணையில் 01 ஆவது பட்டியலில் குறிப்பிடப்படும் கிராம அபிவிருத்தி விடயத்தை முகாமைத்துவம் செய்வதற்காக இதுவரை பயன்படுத்தப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் இந்நியதிச் சட்டம் நடைமுறைக்க வந்த நாள் முதல், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்களாக இனங்காணப்படுவர்.

மக்கள் பணிப்பாளர்கள்

10.1 ஊவா மாகாண சபையால் கிராம அபிவிருத்தி விடயத்தை முகாமைத்துவம் செய்வதற்காக மாகாண விளையாட்டு பணிப்பாளர் ஒருவரும், சம்பந்தப்பட்ட மாவட்ட உத்தியோகத்தர்களுடைய தேவைக்கு ஏற்றவாறு தெரிவுசெய்து கொள்ள வேண்டும். மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் மாகாண கிராம அபிவிருத்தி

பணிப்பாளர், மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருடைய சிரேஷ்ட உத்தியோகத்தராவார்.

10.2 இவ் உத்தியோகத்தர்கள், மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அல்லது உரிய வகையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் நியமிக்கப்படுவார்;

10.3 கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் கடமைகளை அமைச்சின் செயலாளரால் தீர்மானிக்கப்படுவதோடு, திணைக்கள உத்தியோகத்தர்கள் இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும் ;

(11) இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கின்ற ஊவா மாகாண அரச ஊழியர்கள் தண்டனை சட்ட கோவையின் கீழ் விளக்கமளிக்கப்படும் அரச ஊழியர்களாக கருதப்படல் வேண்டும்.

*தண்டனை சட்ட கோவையுடனான தொடர்புகள்*

(12) இந்நியதிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும், தத்தமது அதிகாரங்களையும் பொறுப்புகளையும் நடைமுறைப்படுத்துகையளில், அமைச்சரினால் அல்லது அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படும் பொதுவானதும், விசேடமானதும் என கருதுகின்ற ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாக செயற்பட வேண்டும்.

(13) திணைக்களத்தின் முற்பண மற்றும் மீண்டெழும் செலவுகளை குறைப்பதற்காக மாகாண சபை வருடாந்த வரவு செலவின் மூலம் ஒதுக்கீட்டுப் பணிகளை மேற்கொள்ளல் வேண்டும்.

*திணைக்களத்தின் கணக்கு*

(14) கீழ் குறிப்பிடப்படும் அனைத்து வைப்பீடுகளையும், ஊவா மாகாண அதிகார சபை என்ற கணக்கில் வைப்பீடு செய்தல் வேண்டும்.

*கிராம அபிவிருத்தி மேம்பாட்டு விவகாரங்களுக்காக கிடைக்கின்ற வேறு ஒதுக்கீடுகளை கணக்குகளில் வைப்பீடு செய்தல்*

(அ) அரசாங்கத்திலிருந்து கிடைக்கின்ற விசேட வழங்கீடுகள் ;
(ஆ) மாகாண சபை விசேட வழங்கீடுகள் ;
(இ) எவரேனும் ஒரு நபர் ஒரு நிறுவனம் என்பவற்றினால் வழங்கப்பட்டுள்ள அன்பளிப்புகள் ;
(ஈ) அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் வழங்கீடுகள் ;
(உ) லொத்தர், சீட்டிலுப்பு, இசை நிகழ்ச்சிகள், உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட வழிகளில் கிடைக்கின்ற வருமானம் ;
(ஊ) ஊவா காணத்தில் செயழிலந்துள்ள சங்கங்கள், செயழிலந்துள்ள சங்கங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்த முடியாத பட்சத்தில் அவற்றை நிறைவு செய்வதன்மூலம் கிடைக்கின்ற நிதி.

15.1 பஞ்சாங்க ஆண்டொன்று சங்க அதிகார சபையின் கணக்கு ஆண்டாகும்;

*நிதி ஆண்டு*

15.2 சங்கங்கள் மற்றும் அதிகார சபை கணக்குகள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டமூலத்தின் 28 ஆவது பந்தியின் கீழ் கணக்காய்வு பணிகளை மேற்கொள்ளல் வேண்டும் ;

16.1 அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ள யாப்புகளுக்கு ஒத்திசைவாக கடமையாற்றுவதற்கு கிராம அபிவிருத்தி துறையில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்துள்ளார்கள்;

*அனுமதிக்கப்பட்ட யாப்பிற்கு புறம்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்*

16.2 பதிவுசெய்யப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள் பிரதேச அதிகார சபைகள், மாவட்ட அதிகார சபைகளில் மாகாண அதிகார சபைகளில் மாற்றம் செய்யப்பட்ட பட்டியலொன்றை அமைச்சின் மூலம் வழிநடாத்த வேண்டும்;

16.3 பிரதேச செயலாளர் பிரிவு சார்பாக சம்பந்தப்பட்ட சங்கங்களின் பட்டியலொன்றை பிரதேச செயலாளர் பிரிவில் வழிநடாத்த வேண்டும் ;

16.4 இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களையும், அங்கீகரிக்கப்பட்டுள்ள யாப்பிற்கும் புறம்பாக செயற்படுகின்ற சங்கங்களுக்கும் அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கும் எதிராக, உரிய விசாரணை பணிகளை நடாத்துவதற்கான

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாணத்தின் மாகாண சபை 2011 ஆம் ஆண்டின் 04 உடைய ஊவா மாகாணத்தின் கல்வி நியதிச் சட்டம்*

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் 2011, மார்ச் மாதம் 24 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவரினதும் கவனத்திற்காக இத்தால் வெளியிடுகின்றேன்.

கே. டீ. சிறிசேன,
மாகாண சபைச் செயலாளர்,
ஊவா மாகாணம்.

ஊவா மாகாண சபை அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை.
2011, ஏப்பிறல் 18.

**ஊவா மாகாண மாகாண சபை 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஊவா மாகாண சபை கல்வீ நியதிச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் ஒன்பதாம் உப அட்டவணையின் முதலாம் அட்டவணையின் முதலாவது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கல்வி, கல்விச் சேவை மற்றும் அதறகு இடைநேர் விளையக் கூடிய விடயங்களை ஏற்பாடு செய்வதற்கும், ஊவா மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க கல்வி நியதிச் சட்டத்தை மாற்றியமைப்பதற்கு ஏற்பாடு செய்வது தொடர்பான நியதிச் சட்டமாகும்.

இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அவ்வப்போது 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்வி கட்டளை சட்டத்திற்கு ஒத்திசைவானது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

*சுருக்கப்பெயரும் நடைமுறைப்படுத் தப்படும் திகதியும்.*

1. இந்நியதிச் சட்டத்தை ஊவா மாகாண சபையின் 2011 ஆம் இலக்கமுடைய "கல்வி நியதிச் சட்டம்' என அறிமுகப்படுத்தப்படும். ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும்.

**1 ஆம் பகுதி**

ஊவா மாகாணத்தின் கல்வித் திணைக்களமும் அதன் பதவிகளும்

*ஊவா மாகாண கல்வி திணைக் களத்தின் கீழ் பதவிகளை தாபித்தல்.*

2. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக தேவைகளுக்கு ஏற்றவாறு ஆக்கத் துறையில் திறமையுள்ள பிரஜைகளை உருவாக்குவதற்கு தேவையான கல்விச் சேவைகளை ஊவா மாகாணத்திற்குள் நடைமுறைபடுத்துவதற்காக (இதனை தொடர்ந்து திணைக்களம் என அறிமுகப்படுத்தப்படும்) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் ஊவா மாகாண சபையின், மாகாண சபையின் கல்வி பணிப்பாளர், மேலதிக கல்வி பணிப்பாளர், மேலதிக கல்வி பணப்பாளர், பிரநிதிக் கல்வி பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் உதவி கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை இத்தால் தாபிக்கப்படுகின்றது.

3. (1) இந்நியதிச் சட்டத்தின் கடமைகளுக்காக 2 ஆவது பந்தியின் கீழ் பிரஸ்தாபிக்கப்பட்ட (இதனை தொடர்ந்து மாகாண கல்வி பணிப்பாளர் என அறிமுகப்படுத்தப்படும்) ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் என்ற பெயரில் பதவி வகிப்பவர் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதானியாவார்.

(2) ஊவா மாகாணத்தின் அமைச்சரவையின், கல்வி விடயம் பொறுப்பான அமைச்சர் அவர்களுடைய (இதனை தொடர்ந்து அமைச்சர் என அறிமுகப்படுத்தப்படுகின்ற) சாதாரண அல்லது விசேட ஏற்பாடுகளின் கீழ் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அவர்கள் இந்நியதிச் சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவதற்கான பொறுப்பதிகாரியாவார்.

(3) இந்நியதிச் சட்டத்தின் கடமைகளுக்காக மேல் இரண்டாவது பிரிவின் கீழ் பிரஸ்தாபிக்கப்பட்ட கல்வி பணிப்பாளர் பதவிக்கென பொருத்தமான ஒருஜவரை ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் நியமனம் செய்தல் வேண்டும்.

(4) இந்நியதிச் சட்டத்தின் கடமைகளுக்காக தேசிய நிர்ணயங்களின் கீழ் ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களுடைய அனுமதிக்கிணங்க ஊவா மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் மூலமாக மேலதிக கல்வி பணிப்பாளர்கள், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், வலய கல்வி பணிப்பாளர்கள் உட்பட தேவையான உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல் வேண்டு.

(5) இந்நியதிச்சட்டத்தை நடைமுறைப்படுத்த முன்பு ஏற்கனவே செயற்பட்ட ஊவா மாகாண கல்வி திணைக்கள்தின் கீழ் அனைத்து பதவிகளையும் இந்நியதிச் சட்டத்தை அங்கீகரிக்கப்பட்ட நாள் முதல் ஸ்தாபிக்கப்பட்டதாக கருத வேண்டியதோடு அத்திணைக்களத்தின் பதவிகளில் பதவி வகிக்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டதாக கருதப்பட வேண்டும்.

அதிகாரப் பிரிவு

(7) இந்நியதிச் சட்டத்தின் ஊடாக உத்தியோகத்தர்களை நியமித்தல் இடமாற்றம் செய்தல் ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் அல்லது அவ்வப்போது அதிகாரம் வழங்கப்படும் மாகாண அரச சேவை ஆணைக்குழு மூலமாகவோ அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்டவர் மூலமாகவோ செயற்படல் வேண்டும்.

(8) இந்நியதிச் சட்டத்தின் கீழ் மாகாண கல்வி பணிப்பாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள எந்த ஒரு அதிகாரத்தையும் அவரினால் மேலதிக கல்விப் பணிப்பாளரிடம் பிரதி கல்விப் பணிப்பாளரிடம் வலயக் கல்வி பணிப்பாளரிடம் அல்லது உதவி கல்விப் பணிப்பாளரிடம் பொறுப்பளிக்க முடியும்.

மாகாண கல்வித் திணைக்களத்தின் கடமைகள்.

(9) (1) (அ) இவ்விஞ்ஞாபன உப அட்டவணை I இல் உள்ளடக்கப்பட்டிருக்கும் வகைக்குட்படும் சகல பாடசாலைகளும் (தேசிய பாடசாலைகள் தவிர) வசதிகளை அளித்தல் ;

(ஆ) அப்பாடசாலைகளை மேற்பார்வை செய்தலும் முகாமைத்துவம் செய்தலும் ;

(இ) வருடாந்த கல்வித் திட்டங்களை தயாரித்தலும் அவற்றை செயற்படுத்தலும் ;

(ஈ) கல்வியற் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் மூலம் வழங்கப்படுவதும் கற்பித்தலுக்கு பொருத்தமானதென ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதுமான டிப்ளோமா பட்டம் பெற்றோர்களை ஊவா மாகாண பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்தல் ;

(உ) கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சாதனை மட்டத்தை மதிப்பிடல் ;

(ஊ) தேசிய கல்வி நிறுவகம் மற்றும் மத்திய கல்வி அமைச்சு என்பனவற்றின் அனுமதியுடன் பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்துதல்;

(எ) பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் மூலம் அனுமதிக்கப்பட்ட மாகாண கல்வித் திணைக்களம் மூலம் ஒழுங்குபடுத்தப்படட பிரதேசப் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஏ) முறைசாரா கல்வி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ஐ) தேசியக் கல்வி நிறுவகத்தின் அனுமதியுடன் ஆரம்பக் கல்வி பாடத்திட்டங்களிலும் இடைநிலைக் கல்வி பாடத்திட்டங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களிலும் பிரதேசமயப்படுத்தப்பட்ட மாற்றங்களை செய்து கொள்ளல் ;

(ஒ) கற்றல் உபகரணங்கள் கட்புல, செவிப்புல, உபகரணங்கள், பாடசாலைத் தளபாடங்கள் பெற்றுக் கொள்ளலும், வழங்குதலும் ;

(ஓ) பாடாலைக் கட்டடங்கள், நூலகம், விளையாட்டு மைதானம், கல்வித்துறை சார்ந்த ஏனைய கட்டடங்கள் என்பனவற்றை நிர்மாணித்தலும் பராமரித்தலும் ;

(ஔ) பாடசாலை விஞ்ஞான உபகரணங்களை பெற்றுக் கொள்ளலும் வழங்குதலும் ;

(க) தேசிய நூலக சேவை சபையின் வழிகாட்டலின் மூலம் பாடசாலை நூலகங்களை ஆரம்பித்தலும்;

(கா) மாகாணத்தினுள் தரம் மிக்க கல்வி மேம்பாட்டினை உருவாக்கத் தேவையான செயற்றிட்டங்களை திட்டமிடுதல் ;

(கி) ABC பாடசாலைகள் தவிர ஏனைய சகல பாடசாலைகளுக்கான அதிபர்களை நியமனம் செய்தல்;

(கீ) மாகாணத்திலுள்ள முன்பள்ளிகளை நடாத்திச் செல்லுதலும் மேற்பார்வை செய்தலும் ;

(கு) ஊவா மாகாணத்தினுள் அடங்கும் யாதேனும் கோட்டக்கல்விக் காரியாலயத்தின் எல்லையை நிர்ணயம் செய்தல்;

(கெ) பாடசாலை மாணவருக்கான வைத்திய பரிசோதனை பரிகாரங்களை பெற்றுக் கொடுத்தல், மாணவருக்கான சுகாதார, இலவச உணவு வழங்கலும், இலவச புத்தகங்களை வழங்குதலும் உட்பட மாணவர் நலன்புரி செயற்பாடுகள்.

(கெ) மாகாணத்தின் முதியோர் கல்விக்கான செயற்பாடுகளை திட்டமிடுதலும் செயற்படுத்தலும்.

*மாகாண கல்வி ஆலோசனைச் சபையை தாபித்தல்.*

9.1 (i) மாகாண கல்வி அமைச்சிரின் மூலம் மாகாண முதலமைச்சரின் இணக்கத்துடன் கல்வித்துறையில் துறைசார்ந்த 13 பேர் அடங்கிய முன்னர் குறிப்பிட்டவாறான அடங்கிய முன்னர் குறிப்பிட்டவாறான "ஆலோசனைச் சபை" என்றவாறான கல்வி ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படும்.

*ஆலோசனை குழு அமைப்பு.*

(ii) (அ) மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்;
(ஆ) மாகாணக் கல்வி திணைக்களப் பணிப்பாளர்;
(இ) ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக உபபீடாதிபதி மூலம் பெயர் குறிக்கப்பட்ட விரிவுரையாளர் சார்பிலான பிரதிநிதி ஒருவர்;
(ஈ) அமைச்சரின் மூலம் நியமனம் செய்யப்படும் கல்வியியலாளர்கள் நான்கு பேர் ;
(உ) கல்வி நிருவாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர்;
(ஊ) கல்வி நிருவாக சேவை தரம் 1 இன் சிரேஷ்ட இளைப்பாறிய அதிகாரி ஒருவர்;
(எ) அதிபர் சேவை தரம் 1 இன் சிரேஷ் அதிகாரி ஒருவர்;
(ஏ) கல்விப்புல தொழிற்சங்க பிரதிநிதித்துவம் சார்பாக இருவர்.

*தலைவர், செயலாளரை நியமனம் செய்தல்*

(iii) மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் இக்குழுவின் உத்தியோகபூர்வமான தலைவராவதுடன் மாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் அதன் செயலாளராவார்;

(iv) ஆலோசனைச் சபைக்கு பெயர் குறிக்கப்படும் நபர்கள் தமது சேவைக்காலத்தின் போது எவ்வகையான குற்றச்சாட்டிற்கும் உரித்தானவராக இருக்கக்கூடாது;

(v) மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வித் திணைக்கள பணிப்பாளரைத்த விர ஆலோசனைச் சபையின் ஏனைய அங்கத்தவர்களை தனது சுயவிருப்பின் பேரில் காரணம் கூறி மாகாண கல்வி அமைச்சரினால் விலக்கப்பட முடியும் ;

(vi) இராஜினாமா செய்தல், மரணம் சம்பவித்தல், பதவியிலிருந்து விலகுதல் போன்றவை காரணமாக பதவியை காலி செய்தல் தவிர்ந்து ஆலோசனைச் சபையின் அங்கத்தவர் ஒருவர் அங்கத்துவத்திற்கு நியமிக்கப்பட்ட தினம் முதல் 03 வருடத்திற்கு தமது பதவியை வகித்தல் அவசியம் தேவையேற்படின் இக்குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மீண்டும் அவரை அங்கத்தவராக நியமிக்கப்பட முடியும்;

(vii) ஆலோசனைச் சபையின் அங்கத்தவர் ஒருவர் தமது சுயதேவையின் நிமித்தம் மாகாணக் கல்வி அமைச்சருக்கு எழுதப்படும் கடிதத்தின் மூலம் எந்நேரமும் தமது பதவியை இராஜினாமா செய்ய முடியும். அவ்வாறு இராஜினாமா செய்யும் அங்கத்தவருக்காக நியமனம் செய்யும் அங்கத்தவருக்காக நியமனம் செய்யப்படும் பதிவாளரின் பதவிக்காலம் முன்னவரி மிகுதியான பதவிக்காலம் மட்டுமேயாகும்;

(viii) ஆலோசனைச் சபைச் சபையின் கூட்டம் கூட்டுதல், நடாத்துதல் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட ேண்டிய சட்டதிட்டங்கள் இவ்விஞ்ஞாபனத்தின் கீழா கட்டளையின் ஊடாக செய்யப்பட வேண்டும் ஆலோசனைச் சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்தலுக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் தீர்மான த்திற்கேற்ப பொருத்தமான ஒரு குறிப்பிட்ட சகாயப்படியினை வழங்க முடியும்.

(10) (i) கல்வி, கல்வி வாய்ப்புகள் வழங்குதலுக்கான காரணிகள் தொடர்பானவையும் அமைச்சரின் மூலம் ஆலோசனைக்காக ஆலோசனைச் சபைக்கு சமர்ப்பிக்கப்படும் விடயங்களை தொடரானவையும் ஆலோசனை வழங்கப்பட வேண்டும் என்று உணரும் ஏதேனும் விடயம் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ; ஆலோசனைக் குழுவின் கடமைகள்.

(ii) அமைச்சரின் கோரிக்கைக்கு இணங்க அமைச்சரால் கேட்டுக் கொள்ளப்படும் போது தேசிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்பவும், நோக்கங்களுக்கு இணங்கவும் மாகாணக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தினை உருவாக்க ஆலோசனையளித்தல்;

(iii) கல்வித்துறை சார் கட்டிடங்கள், விளையாட்டு மைதானம், தொழில்நுட்ப அறைகள், மாணவர் விடுதிகள், ஆசிரியர் விடுதிகள், ஏனைய கல்வித்துறைசார் கட்டிட நிர்மாணிப்புகள் தொடர்பாக வழிகாட்டுதல் ஆலோசனையளித்தல்;

(iv) கற்றல் கற்பித்தல் செயலொழுங்குக்குரிய கற்றல் உபகரணங்களை வழங்கலும், நூலக வசதிகள், விளையாட்டு உட்பட ஏனைய வசதிகளை வழங்கும் பொருட்டு ஆலோசனையளித்தல்;

(v) புதிதாக தொடங்கப்பட வேண்டிய பாடசாலைகள் சம்பந்தமான விடயங்களை கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளை வழங்குதல் ;

(vi) பாடசாலைத கட்டமைப்பு வகைப்படுத்தல் அவற்றின் தரஉயர்வு பாடசாலைக்கு பெயரிடல், மாற்றுதல் பாடசாலையை மூடுதல் தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனைகளை வழங்குதல் ;

(vii) பாடசாலையில்புதிய வகுப்புக்களை ஆரம்பித்தல், கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப பாடங்களுக்கான மத்திய நிலையங்களைத் தீர்மானித்தல் முறைசாரா கல்வி தொடர்பான நடவடிக்கைகள், ஆங்கிலம் உட்பட வெளிநாட்டு மொழிகள் கற்பித்தல் தொடர்பான ஆலோசனகளை வழங்குதல் ;

(viii) தேவையான சந்தர்ப்பங்களில் கல்வி மேம்பாட்டு திட்டமிடலுக்கு பொருத்தமான புதிய ஆலோசனைகளை முன்வைத்தல், திட்டமிடலை மறுசீரமைத்தல் பற்றிய ஆலோசனைகளை வழங்குதல்;

(ix) கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது பெறப்படும் முன்னேற்றத்தை அவ்வப்போது பகுப்பாய்வு உட்படுத்தல்;

(x) மாகாணத்திற்குள் கல்வி தரவிருத்தி தொடர்பான ஆலோசனைகளை முன்வைத்தல், கல்வி நோக்கங்களை எய்தும்போது எதிர்நோக்கும் தடைகள், கஷ்டங்கள் என்பனவற்றை தவிர்ப்பதற்காக கைக்கொள்ள வேண்டிய வழிவகைகள் தொடர்காக அமைச்சருக்கு ஆலோசனைகளை முன்வைத்தல்.

(11) கீழ்க் காணப்படும் துறைகளுக்கு பொருத்தமாக செயற்படும் போது அரசின் மூலமாக அவ்வப்போது அனுமதிக்கப்பட்ட தேசியகொள்கைகளுக்கு இணைவாக செயற்படல் வேண்டும்:- பொதுச் செயற்பாடுகள்.

(அ) கட்டாயக் கல்வியை திட்டமிடல் ;
(ஆ) பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு ஏனைய வகுப்புகளுக்கும் மாணவர்களைச் சேர்த்தல் ;

(இ) வசதிகள் சேவைகள் கட்டணத்தை அறவிடல் ;

(ஈ) பாடசாலை அபிவிருத்திச் சபைகளை தாபித்து நடாத்திச் செல்லுதல் ;

(உ) பாடவிதான அபிவிருத்தியும் செயற்படுத்தலும் ;

(ஊ) ஆசிரியர்களுக்கான இடமாற்றம் தொடர்பாக தேசிய கொள்கைகளுக்கு இணைவாக மாகாண அதிகாரிகள் செயற்படல்;

(எ) பாடசாலை வகைப்படுத்தல் தொடர்பக தேசிய கொள்கைகளுக்கு இணைவாக ஊவா மாகாணத்தினுள் பாடசாலைகளை வகைப்படுத்தல்;

(ஏ) இணக்கப்பாடவிதான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்;

(ஐ) தேசிய கொள்கைகளுக்கு அமைவாக வெற்றிடங்களுக்கு அதிகாரிகளையும் பாடசலைகளுக்கு அதிபர்களையும் நியமித்தல்.

*பாடசாலைக் கட்டடங்கள், சுற்றாடல், உபகரணங்கள், பாடசாலை மாணவர்களை வேறு தேவை களுக்காகப் பயன்படுத்தாமல் இருத்தல்.*

(12) ஊவா மாகாணத்தினுள் காணப்படும் பாடசாலைக் கட்டடங்கள், சுற்றாடல், அங்கு காணப்படும் உபகரணங்கள் போன்றவை அனுமதிக்கப்பட்ட விளையாட்டு காலாசார சமய தேவைகள் தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படக்கூடாது அதே போல பாடசாலை மாணவர்களையும் கல்வித் தேவைகள் அல்லாத எவ்வித வைபவங்களுக்கோ நடவடிக்கைகளுக்கோ பயன்படுத்தக்கூடாது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய தேவைகளுக்காக பயன்படுத்துவதாயின் அதற்காக கல்விப்பணிப்பாளரின் பூரண அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*கல்வித் திணைக் களத்திற்கு உரித்தான சொத்துக்கள்.*

(13) இந்நியதிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் தினத்திற்கு முன் தினத்தில் கல்வி நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக அரசுக்கு அல்லது மாகாண சபைக்கு உரித்தான அல்லது வேறு வகையில் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் நிலங்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருப்பின் அவை இவ்விஞ்ஞாபனத்தின் கீழ் உருவாக்கப்படும் கால்வித் திணைக்களத்திற்கு சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களாக கருதப்படும்;

(14) (i) விதந்துரைக்கப்பட்ட வருடத்தினுள் ஊவா மாகாண கல்வி நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் அங்கு தோன்றிய இடர்பாடகள், சிக்கல்கள்), அவற்றை தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், கல்வித்துறையில் காணப்படும் பயிற்சிகள், வழுங்கல்கள் போன்றவை அடங்கியதான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு மாகாண கல்விப் பணிப்பாளர் மூலம் மாகாண கல்வி செயலாளர் ஊடாக அதற்கு அடுத்து வருடத்தின் யூன் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் மாகாண கல்வி அமைச்சருக்கு முன் வைக்கப்பட வேண்டும்;

(ii) ஊவா மாகாண கல்வி அமைச்சர் மூலம் அந்நிர்வாக அறிக்கை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*கட்டளை அல்லது தீர்மானத்தை மாற்றுவதற்கோ அல்லது பரிசீலனை செய்யவோ அமைச்சருக்கு உள்ள அதிகாரம்.*

(15) (i) இந்நியதிச் சட்டத்தை அல்லது அதன் கீழ் விதிக்கப்படும் சட்டவிதிகளின் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரம்/விருப்பினை பயன்படுத்தி மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஊடாக செய்யப்படும் ஏதாவது கட்டளை அல்லது தீர்மானம் வேறு சாதாரண காரணத்தால் மாற்றப்பட அல்லது பரிசீலிக்கும் அதிகாரம் கல்வி அமைச்சருக்கு உரித்தானது;

(ii) அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஐ ஆம் இலக்க உபபந்தியின் கீழ் அமைச்சர் மூலம் வங்கப்படும் தீர்மானம் சட்டப்பூர்வமானது. இறுதியானதாகவும் அமைவதுடன் அத்தீர்மானங்கள் கட்டுப்படுத்தும் சகலரும் அத்தீர்மானத்திற்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்.

*சட்டவிதிகளை நடைமுறைப் படுத்தல்.*

(16) (i) இந்நியதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு விடயம் தொடர்பாகவோ அல்லது சகல விடயங்களும் தொடர்பாகவொ அமைச்சர் மூலம் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்த முடியும். விசேடமாக,

(அ) மாகாண பாடசாலைகளில் கல்விசார் பரீட்சைகளை நடாத்துதல்;

(ஆ) பாடசாலை கட்டங்களையும் சுற்றாடலையும் பாதுகாத்தல்;

(இ) புதிய பாடசாலைகளை ஆரம்பித்தல்;

(ஈ) பாடசாலை மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்தல்.

(ii) மேற்குறிப்பிட்ட ஐ ஆம் இலக்க உபபந்தியின் கீழ் அமைச்சர் மூலமாக விதிகக்ப்பட்ட சகல சட்டவிதிகளும் அரசின் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்ட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட தினம அல்லது சட்டவிதியில் குறிப்பிட்ட பிரகாரம் ஏதாவது பிற்குறிக்கப்பட்ட தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்;

(iii) மேற்குறிப்பிட்ட I ஆம் இலக்க உபந்தியின் கீழ் இயற்றப்பட்ட சகல சட்டவிதிகளும் அரசின் வர்த்தமானி பிரசுரத்தில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் அது முடிந்தளவு விரைவில் ஊவா மாகாண சபையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட வேண்டும். மாகாண சபையின் மூலம் அனுமதிச்கப்படாத சகல சட்டவிதிகளும் அதன் அடிப்படையில் முன்னர் விதிக்கப்பட்ட வரைவுகளுக்கு பாதகம் ஏற்படாத வகையில் அவ்வாறு அனுமதிக்கப்படாத நாள் தொடக்கம் பரிசீலனைக்கு உட்படுவதாக கருதப்பட வேண்டும்;

(iv) ஏதாவது சட்டவிதி பரிசீலனைக்கு உரியது என கருதப்படும் தினம் அரசின் வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(17) அவசர மற்றும் அத்தியாவசிய சந்தர்ப்பங்களில் ஊவா மாகாணத்தினுள் காணப்படும் சில பாடசாலைகள் அல்லது சகல பாடசாலைகளுக்கும் பாடசாலை விடுமுறை தினங்கள் பிரகடனப்படுத்தும் அதிகாரம் மாகாண கல்வி அமைச்சருக்கு உரியதாகும். பாடசாலை விடுமுறை தினங்களை பிரகடனப்படுத்தல்.

(18) ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் சகல அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் நிதிக் சட்டக் கோவையின் பிரகாரம் அரசு சேவையாளர்களாக கருதுப்படல் வேண்டும். அதிகாரிகளும் உத்தியோகத்தர் களும் அரச சேவையாளர்கள்.

(19) (i) இம்மாகாணக் கல்வி திணைக்களத்தின் நிதியாண்டு நாட்காட்டி ஆண்டாகும் அதேவேளை மாகாண சபையின் நிதி வெளிப்படுத்துகை மூலம் பெற்றுத் தரப்படும் நிதி மூலகங்களும், ஏனைய வழி வகைகளில் கிடைக்கும் நிதி மூலகங்களும், தேவையேற்படும்போது குறைநிரப்புத் திட்டம் மூலம் கிடைக்கும் நிதி மூலகங்களும் திணைக்கள நிருவாக மேம்பாட்டுத்திட்டங்களுக்காக செயற்படுத்தப்பட வேண்டும்; நிதி ஆண்டு மற்றும் கணக்காய்வு.

(ii) இத்திணைக்கள கணக்கீட்டுச் செயற்பாடுகள் கணக்காய்வு திணைக்களத்தாலும், ஊவா மாகாண சபையின் உள்ளக கணக்காயள்வு பணிப்பாளர் ஊடாகவும் கணக்காய்க்கு உட்படுத்தப்படும். அதேவேளை 1987 ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின்படி 23 ஆம் பிரிவுக்கு இணைவாகவும் அமைய வேண்டும்.

(20) ஊவா மாகாணக் கல்வித் திணைக்களம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் பிரகாரம் உப ஆவணப்படுத்தப்பட்ட நிறுவனமாக கருதுப்பட வேண்டிதுடன், அச்சட்த்தின் விதிகளுக்க உட்பட வேண்டும். திணைக்களமாவது இலஞ்ச ஊழில் சட்டத்தின் பிரகாரம் உப ஆவணப்படுத் தப்பட்ட நிறுவனமாக அமைவது பற்றியது.

(21) இது நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் முதல் செயற்பட கூடிய வகையில் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் “1990 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்கமுடைய நியதிச்சட்டத்தை இத்தால் மாற்றப் படுகின்றது.”.

(22) சொற்கள் தொடர்பாக மேலதிக விளக்கங்கள் தேவையேற்படும்போது தவிர இவ்விஞ்ஞாபனத்தில்,

(1) “அமைச்சர்” என்பது ஊவா மாகாண சபையின் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் எனப் பொருள்படும்;

(2) “செயலாளர்” என்பது ஊவா மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்;

(3) “மாகாணம்” என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் திட்டத்தின் 13 ஆம் பிரிவுக்காக திருத்தத்தில் குறிப்பிட்டவாறாக ஊவா மாகாண அதிகார பிரிவாகும்;

(4) "திணைக்களம்" என்பது, இவ்விஞ்ஞாபனத்தின் கீழ் உருவாக்கப்படும் ஊவா மாகாணக் கல்வித் திணைக்களம் எனப் பொருள்படும்;

(5) "பணிப்பாளர்" எனப்படுவது ஊவா மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு பொறுப்பான தலைவர் எனப் பொருள்படும்;

(6) "பாடசாலைத் தலைவர்" என்பது அதிபர் அல்லது அவருக்காக நியமனம் செய்யப்படும் வேறொருவர் எனப் பொருள்படும்;

(7) "தேசிய கொள்கைகளுக்கு அமைவாக" எனப்படுவது தீவு முழுவதுமடங்கிய சேவையான கல்வி நிருவாக சேவையின் நியமனம் வழங்கும் அதிகாரியாகிய அரச சேவை ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ள 2003.12.02 ஆந் திகதியுடைய இல. 04/03 என்ற சுற்றுநிருபத்தின் விளக்கத்திற்கமைவாக இருக்க வேண்டும் என்பதாகும்.

(8) "மாகாண அரச சேவை ஆணைக்குழு" எனப்படுவது 1987 ஆம் அண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் iv ஆம் பிரிவின் 33 ஆம் பந்தியின் கீழ் உருவாக்கப்படும் மாகாண அரச சேவை ஆணைக்குழு எனப்படுவதாகும்.

சொற்களின் விளக்கம்.

